


# வேளாமீனைப் பாதுகாக்க நீங்கள் உதவலாம்

## குழந்தைகளுக்கான செயல்பாடுகள்



SAWFISH CONSERVATION SOCIETY

save our seas foundation

# விடுவித்தல் மற்றும் தெரிவித்தல்

நீங்கள் இருக்கும் மீனவப் பகுதியில் ஏதேனும் வேளாமீனைப் பார்த்தால் உடனடியாக விடுவித்துவிட்டு, அதைப்பற்றித் தெரிவிப்பது அவசியமாகும்.

வேளாமீனை ‘ஒளித்து வைத்துக் கண்டுபிடித்தல்’ விளையாடி பயிற்சி செய்தல்

1. கீழேயுள்ள வேளாமீன் படத்தை வெட்டி தயார் செய்யவும்
2. ஒரு நண்பரிடம் கூறி வேளாமீனை மறைத்துவைத்து, டைமரை ஆன் பண்ணவும்
3. வேளாமீனைக் கண்டறியவும் பின்னர் அதை உங்கள் நண்பர் கண்டறிவதற்கு மறைத்தது வைக்கவும்
4. நீங்கள் எங்கே வேளாமீனைக் கண்டறிந்தீர்கள் என்பதைப் பற்றி உங்கள் நண்பரிடம் தெரிவித்து டைமரை ஆஃப் பண்ணவும். பின்னர் உங்கள் நண்பரை வேளாமீனை தேடச்சொல்லவும். நேரத்தை வைத்து யார் வேகமாக வேளாமீனைக் கண்டறிந்து விடுவிக்கிறார்கள் என்பதைப் பார்க்கவும்.





பெரிய பதிப்பை எங்கள் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யலாம்



# வேளாமீன் மற்றும் குப்பை

வேளாமீன் இருக்கும் சுற்றுப்புறங்களைத் தூய்மையாகவும் குப்பைகள் இல்லாமலும் வைத்திருக்கவும்




## எப்படி விளையாடுவது?

தாயக்கட்டையை உருட்டவும் அல்லது 1-6 வரையுள்ள எண்கள் உள்ள சீட்டை எடுக்கவும். அதன்படி இந்த போர்டில் பயணிக்கவும்.



சுதந்திரமாக நீந்தும் வேளாமீனின் வால் உள்ள கட்டத்திற்கு வந்தால்,வேளாமீனுடைய மேல்பகுதிக்குச் செல்லவும்.

மாட்டிக்கொண்ட வேளாமீனின் முனை உள்ள கட்டத்திற்கு வந்தால், வேளாமீனுடைய கீழ்பகுதிக்குச் செல்லவும்.

5 கட்டங்கள் தாண்டிச் செல்ல குப்பையை சேகரிக்கவும்.

# வேளாமீனைக் கண்டறியும் நிபுணராக மாறுங்கள்

வேளாமீனைக் கண்டறியும் நிபுணராக இருங்கள். வேளாமீன்கள் பற்றிய தகவல்களை உங்கள் பெற்றோர்கள், ஆன்லைன் மற்றும் புத்தகங்களில் அறிந்து கொள்ளுங்கள். பிறகு, வேளாமீன்களில் மிகவும் சுவாரசியமானதாக நீங்கள் கருதுவதையோ அல்லது வேளாமீன்கள் அழிவின் விளிம்பில் இருப்பதாக நீங்கள்கருத்துவதட்கான காரணங்களையோ கீழே உள்ள கட்டத்தில் எழுதவும் அல்லது வரையவும். நீங்கள் அறிந்துகொன்டத்தை மற்ற 2 பேருக்குச் சொல்லவும்.



வேளாமீனுக்கு உதவ நீங்கள் செய்யக்கூடிய பல விஷயங்கள் உள்ளன. உங்கள் குடும்பம் அல்லது ஆசிரியருடன், நீங்கள் வேளாமீனுக்கு உதவக்கூடிய 3 வழிகளைப் பற்றி சிந்தித்து கீழே எழுதுங்கள். உங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் சேர்ந்து நீங்கள் என்ன செய்ய முடியும் என்று பார்க்கவும்.

1.

2.

3.

sawfishconservationsociety.org